

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓ. சிறுவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்இரா.சிவராமன், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.சரண்யா உட்பட பலர் உள்ளனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா! விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் - நெல்லை கிழக்கு மாவட்டம்

# மேலச் செல்வம் கொழுமடையில் - மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## ஆ.பிரபாகரன் துவக்கி வைக்கிறார்! இரா.ஆவுடையப்பன் பரிசுகள் வழங்குகிறார்!

நெல்லை.செப்.3-

நெல்லை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி மேலச்செவல் கொழுமடையில் இன்றும் (செப்.3) மற்றும் செப்.10, 17ஆகிய நாட்களிலும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தவசி மணிகண்டன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் மணிகண்டன் வானுமாமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட விளையாட்டு அணிதுணை அமைப்பாளர் சுதர்சனன் வரவேற்புரை ஆற்றுகிறார். போட்டியை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் வெற்றிக் கோப்பையை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட துணை செயலாளர் நம்பி, மாநில தொண்டர் அணி துணை செயலாளர்ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட அவை தலைவர் கிரகாம்பெல், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி, அம்பை நகரச் செயலாளர் பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், கணேசன் உள்பட விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாடசாமி நன்றி கூறுகிறார்.

மாணாக்கர்களுக்கு கல்வி உதவி, சிறப்பு பொது மருத்துவ முகாம்

# 141 ‘அ’ வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## வட்ட செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கை!

சென்னை, செப்.3

141 ‘அ’ வட்ட கிளை கழகம் மற்றும் தியாகராயர் நகர் மருத்துவ அணி இணைந்து 3.9.23 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடர் நிகழ்ச்சி மற்றும் மறைந்த முன்னாள் வட்ட கிளை கழக செயலாளர் கோ.வெங்கடேசன் அவர்களின் பட திறப்பு நிகழ்ச்சி சி.ஐ.டி. நகர் 4வது பிரதான சாலை மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

இதில் படதிறப்பு முடிந்து பள்ளி சிறார்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி உணவு அளிக்கப்படுகிறது. மேலும் தியாகராயர் நகர் மருத்துவ அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பி. லஷ்மணன் ஏற்பாட்டில் சி.ஐ.டி. நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

இம்முகாமில் பொது மருத்துவம், பல் மருத்துவ பரிசோதனை மற்றும் கிட், கண் பரிசோதனை மற்றும் இலவச கண்ணாடி, காது கேட்கும் திறன் அறிதல் சோதனை செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியை துவக்கி வைக்க சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு மற்றும் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வருகை புரிகின்றனர். மேலும் பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. மற்றும் 141 வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் எம்.சி கலந்து சிறப்பிக்கின்றனர்.

எனவே வட்ட கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் (DBCS) செங்கல்பட்டு சிட்லபாக்கம் அரிமா சங்கம் ரீ சங்கர வித்யாலயா, கிழக்கு தாம்பரம் ரீ ஜெயேந்திர சரஸ்வதி இன்ஸ்டிட்யூட் ஆப் ஆப்டோமெட்ரி பம்மல் மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் *38வது தேசிய கண் தான இருவார விழிப்புணர்வு பேரணி* நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் . எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பேரணியை துவக்கி வைத்தார். உடன் 4வது மண்டல குழுத்தலைவர்கள் டி காமராஜ் , எஸ் இந்திரன், வி ஜெயபிரதீப், எஸ் சிவகுமார், முத்துகுமார், பாலு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஜெகன், ஜோதிகுமார், கிரிஜா சந்திரன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் கி வேலுமணி ,பி சினிவாசகுமார், வீ முனுசாமி ,வீ கார்த்திக், எஸ் ராஜேஷ், எம் வினோத், லோகேஸ், முருகன், நசீர், ஜெயம்ரவி மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்களும் பள்ளி மாணவ மாணவியர்களும் கலந்து கொண்டனர் ...

துரை கி.சரவணன் தலைமை! மயிலை த.வேலு - நே.சிற்றரசு சிறப்புரை!

# சென்னை மண்டல - கழகப் பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## கு.கருணாநிதி - அ.வெற்றியழகன் - கு.சண்முகசுந்தரம் - வே.உமாகாந்த் - இரா.நரேந்திரன் - சி.பிரதீப் - இரா.பரமேசுகுமார் பங்கேற்பு!

சென்னை, செப்.3-

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவும், சென்னை மண்டல கழகப் பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டமும் நாளை (4.9.2023 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை - தேனாம்பேட்டை, அன்பகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் - சென்னை தென்மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இரா. சக்கரவர்த்தி வரவேற்றுப் பேசுகிறார்.

இக்கூட்டத்திற்கு - கழகப் பொறியாளர் அணி மாநிலத் தலைவர் துரை கி.சரவணன் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொறியாளர் அணியின் மாநில இணைச் செயலாளர் - துணைச் செயலாளர்களான அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ. கு.சண்முகசுந்தரம் எம்.பி., வே.உமாகாந்த், இரா.நரேந்திரன், முனைவர் சி.பிரதீப், இரா.ப.பரமேசு குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை, தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆகியோர் சிறப்புரையா ற்றுகின்றனர்.

கழகப் பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் கு.கருணாநிதி - நோக்க உரை ஆற்றுகிறார்.

சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ச. அசோக்குமார் நன்றி கூறுகிறார்.

இதில் சென்னை மண்டல மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பொறியாளர் அணியின் அமைப்பாளர்கள் / தலைவர்கள் / துணை தலைவர்கள் / துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கழகப் பொறியாளர் அணி மாநில நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.



சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நீட் எதிர்ப்பு போராட்டத்தில் தன் இன்னுயிரை நீர்த்த மாணவி அனிதாவிற்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளையஅருணா தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் ஏற்பாட்டில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்,மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன்,வட்ட செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆர். வெற்றிவீரன், ஆர்.வி.லட்சுமிவேலு, ஜே.கே.நாதன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, எஸ்.பி.எஸ்.புத்தன், என். மருதுகணேஷ், குமாரிநாகராஜன் எம்.சி,ஆர்.டி.ராஜா, மு.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், எம்.கோவிந்தராஜ், வட்ட செயலாளர்கள் என்.எம்.கதிரேசன், தா.வா.மு.கஜேந்திரன், ந.கோதண்டன், மா.நாகராஜ்,ப.குமார், பொ.து.ராஜா, வீ.வடிவேலு, எஸ்.எல்.சுந்தர் மற்றும் பகுதி கழக வட்ட கழக, நிர்வாகிகள் மாணவர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

